2. இரங்கற் தீர்மானம்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் துணைத் தலைவர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தியது குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் துணைத் தலைவர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் காலமானார் என்னும் செய்தியை மிக்க வருத்தத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட இரங்கற் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"1952-ம் ஆண்டு முதல் 1972-ம் ஆண்டு வரை இம் மன்றத்தின் உறுப்பினராகவும், 1969-ம் ஆண்டு முதல் 1972-ம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவராகவும் இருந்த திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து இம்மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது".

தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 20 ஆண்டுக்காலம் இந்த மாமன்றத்திலே அரும் பணிகளை ஆற்றி, அனைவருடைய அன்புக்கும் பாத்திரமாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் இந்த மன்றத்திலே பேசியபோதெல்லாம், ஆசிரியப் பெருமக்களுக்காக வாதாடியிருக்கின்றார். அவர்களுடைய நல்வாழ்வு, அவர்களுடைய முன்னேற்றம், அவர்களுடைய தேவைகளை வலியுறுத்திப் பேசுகின்ற தன்மை மறைந்த பெரியவருடைய ஒவ்வொரு தடவைப் பேச்சிலும் ஒலித்ததை நாம் அனைவரும் கண்டிருக்கிறோம், கேட்டிருக்கிறோம். இந்த மன்றத்திலே அதிகமாகக் கேள்விகளை எழுப்பி, அமைச்சர்களிடத்திலே அதற்கான விடைகளைப் பெறுவதில் மிகுந்த ஆர்வமும், துடிதுடிப்பும் அவர்கள் காட்டியிருக்கின்றார்கள். பழகுவதற்கு மிக எளியவராகவும், இனிய சுபாவம் படைத்தவராகவும், அவர்கள் திகழ்ந்தார்கள். இந்த மன்றத்திலே 3 ஆண்டுக் காலம் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், இந்த

1972 நவம்பர் 13] [டாக்டர் மு. கருணாநிதி]

மன்றத்தின் மாபுகளை எப்படிக் காப்பாற்ற வேண்டுமென்பதை அறிந்து, சிறப்பாக இந்த மன்றம், பொதுவாக தமிழகத்திலே உள்ள சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகிய மன்றங்கள் நீண்ட நெடுங்காலமாகக் கட்டிக் காத்து வருகின்ற பாரம்பரியம், பெருமை ஒருசிறிதும் குறையக்கூடாது என்று தாங்கள் காட்டி வருகின்ற அக்கரைபோல, மறைந்த பெரியவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் காட்டிவந்தார்கள். அவர்கள் நாளெல்லாம் பொது வாழ்வுக்காக, குறிப்பாக ஆசிரியப் பெருமக்களுடைய நல்வாழ்வுக் காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார் என்பது, நம்முடைய நெஞ்சை விட்டு, மறையாத, நீங்காத நினைவாக இருக்கின்றது. அப்படிப்பட்ட பெரியவர் அவர்களுடைய மறைவுக்கு, இம் மன்றத்தின் சார்பில் அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதை எடுத்துக்கூறி, இந்த அளவில் அமர்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, சபையின் முதல்வர் அவர்கள் முன் மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன். அன்பர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் பல வருஷங்களாக இந்தச் சபையில் ஒரு அங்கத்தினராக இருந்தாலும். ஆசிரியர் பிரச்சினை தவிர வேறு எந்தப் பிரச்சினையிலும் கலந்துகொண்டதில்லை என்று சொல்லலாம். முழுக்க முழுக்க எப்போது வாய் திறந்தாலும், ஆசிரியர்கள் பிரச்சினையாகவே இருக்கும். சாதாரண அங்கத்தினராக அவர் இருந்தபோது, அவர் பேசாத நாட்களே கிடையாது. ஆசிரியர் பற்றி ஏதாவது கேள்விகள் கேட்பார். வேறு பிரச்சினை வரும் போதும், இடையிலே ஆசிரியர்கள்பற்றி ஒரு நல்ல காரியம் அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்பதற்காகப் பேசுவார். அவர் மறைந்தது பொதுவாக ஆசிரியர் சமுதாயத்துக்கே ஒரு பேரிழப்பாகும். மூன்று ஆண்டுகள் இந்தச் சபையின் உதவித் தலைவராக இருந்து, ஒரு உதவி சபாநாயகர் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதை வெகு அழகாக எடுத்துக்காட்டினர். அவர் திறம்பட கட்சி சார்பற்ற முறையில் பணியாற்றி தன்னுடைய பதவியின் கௌரவத்தை உயர்த்தினர். அப்பேர்ப்பட்டவர் இன்னும் பல்லாண்டுகள் இருந்து, இந்தச் சபையின் அங்கத்தினராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர் மறைந்ததற்கு என் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, நம்முடைய சபை முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, காலஞ்சென்ற பெரியவர், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முழுக்க முழுக்க நல்ல ஆசிரியராகவே வாழ்ந்தார். வாழ்க்கையில் அவர் ஆசிரியராக வாழ்ந்ததைப் போலவே, இந்தப் பேரவையிலும் அவர் முழுக்க முழுக்க நல்ல ஆசிரியராக வாழ்ந்தார். அதோடு மட்டுமின்றி, அவருடைய பதவிக் காலத்தின் பிந்தைய 3 ஆண்டுகளில் இந்தச் சபையின் துணைத் தலைவராக வீற்றிருந்தபோது, அவர் மிகச் சிறப்பும், செம்மையும் நிரம்பிய முறையிலே தம்முடைய துணைத் தலைவர் பணியினை ஆற்றினார்கள். எவ்வளவு சிறந்த, உயர்ந்த நோக்கம் படைத்தவராக இருந்தாரோ, அவ்வளவுக்கு எளிய வாழ்வும் கொண்டிருந்ததை நாம் மறக்க முடியாது. தமக்கு என்று எந்தவிதமான வசதியும்கூட வேண்டாமென்று மறுத்து விட்டதை நம்மிலே பலர் அறிவோம். அத்தகைய ஒரு சிறந்த, நல்ல பெரியவர் காலமானது ஆசிரியத் துறைக்கு மட்டுமின்றி, இந்தச் சபைக்கும் ஒரு பேரிழப்பாகும் என்று சொன்னால் அந்த எண்ணப்பாட்டிலே பல்லோரும் கலந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். அத்தகைய ஒரு நல்ல, சிறந்த சட்டசபைத் துறை அன்பர் காலமானதற்கு நம்முடைய முழு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவருடைய ஆன்மா பரிபூரணமான சாந்தி அடைய, என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் பிரார்த்தித்து அமர்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I join in the chorus of praise that is being given in this House to-day to the memory of late Thiru G. Krishnamoorthy. I first knew him in 1968 when I came to this House after the High Court declared me elected in the bye-election. I was a silent spectator then because the Supreme Court had asked me not to open my mouth. I had to watch Thiru Krishnamoorthy day in and day out plying questions at the Government about the plight of the teachers and I used to think he was a person who took up their cause in right earnest. It is a sorry state of affairs that when he was appointed Deputy Chairman, we could not hear his voice again in the Council. While he occupied this high Office with dignity and praise, we missed him in the House. He had always something to contribute to question-hour and debates.

1972 நவம்பர் 13] [Thiru G. Vasantha Pai]

Sir, on this occasion, may I join with the several Members of this House in communicating our heart-felt grief and condolences to the members of his bereaved family? Thank you, Sir.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அங்கத்தினர்களுக்குள்ளும் நான் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்களை வெகு காலமாக நன்கு அறிவேன். தென்னிந்திய ஆசிரியர் கழகத்தின் வெள்ளிவிழா 1933-ம் ஆண்டு திருச்சி மாநகரத்தில் நடக்கும்போது, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆசிரியர்களின் இணையில்லாத, ஈடில்லாத ஒரு பெருந் தலைவராக சிறுவயதிலேயே தன்னை உயர்த்திக் கொண்டார். அவர் செகண்டரி கிரேட் ஆசிரியர் என்று சொன்னாலே பலர் நம்ப மாட்டார்கள். பேராசிரியர் ஸாரநாதன், திரு. தெய்வசிகாமணி போன்ற பெரியார்களுடன் தோளோடு தோள் நின்று தொண்டு செய்தார். அவர்களிடம் தோல்வி மனப்பான்மையே கிடையாது. ' நான் ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் ', ஆகவே பேராசிரியர் ஸாரநாதனுடன் எப்படி வாதாடுவது என்ற எண்ணமே அவருக்குக் கிடையாது. சரியென்று தெரிந்தால், கடைசி வரையிலும் வாதாடுவார். எதிர்த்து வாதாடுவதில் கல்லூரிப் பேராசிரியர்களாக இருந்தாலும், அதற்காக அவர்கள் தோல்வி மனப்பான்மை கொண்டதே இல்லை. இருபது ஆண்டுகள் அவர்கள் இம் மாமன்றத்தின் அங்கத்தினராக இருந்தார்கள் என்பது ஒரு பெருஞ்சாதனை என்று தான் கூற வேண்டும். ஏனெனில், 1952-ம் ஆண்டில் அவர் தேர்தலுக்கு நிற்கும்போது, இது பரந்த சென்னை மாநிலமாகும் ; விசாகப்பட்டணத்திலிருந்து தென் கன்னடம்-மங்களூர் வரை இருக்கக்கூடிய ஆசிரியர்கள் எல்லாம் சேர்ந்து தங்கள் பிரதிநிதியை அனுப்பி வைக்க வேண்டும். அது மாத்திரம் ஒரு குறை அல்ல. இப்போது பல்கலைக்கழகத் தேர்தல்கள் நடக்கிறமாதிரியாக, அப்போது ஆசிரியர்கள் ஓட்டுச்சாவடி களுக்குச் சென்று ஓட்டுப்போட இயலாது. டிக்ளரேஷன் பாரத்தைத் தான் ஆசிரியர்கள் பார்ப்பார்களே தவிர, ஓட்டுப் பேப்பர்களைக்கூட பார்ப்பதில்லை. 1950-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு வரும்போது பல ஆசிரியர்கள் டிக்ளரேஷன் பாரத்தில் கையெழுத்துப் போட்டிருப்பார்கள் ; பெரிய அதிகாரி தேர்ந் தெடுக்கப்பட்டு விட்டார். பல ஆண்டுகளுக்குப் பின்னால் விசாரணை நடந்தது. கல்வி இலாகாவும் போலீஸ் இலாகாவும் இந்த வாக்குச் சீட்டுகளை மூட்டை மூட்டையாகக் கட்டி இங்கு அனுப்பி

வைத்தார்களே ஒழிய, ஆசிரியர்கள் தங்கள் மனதிற்குகந்த ஆசிரியர் பிரதிநிதிக்கு ஓட்டுப் போடுவது என்பது துர்லபமாக இருந்த காலம் அது. அப்போது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செல்லும் இடங்களில் எல்லாம், ஆசிரியர்கள் கழகம் இருக்க வேண்டும், எல்லா ஆசிரியர்களும் ஒன்றுக இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லுவார்கள். தென்னிந்திய ஆசிரியர் கழகத்தில் கல்லூரி முதல்வர்களிலிருந்து ஆரம்ப ஆசிரியர்கள்வரை ஒன்றுக இருந்தார்கள். பின்னல் பிரிக்கப்பட்டார்கள். ஆசிரியர் கழகங்கள் பிரிக்கப்பட்டு விட்டன என்பது அவருக்கு வருத்தத்தைக் கொடுக்கும் விஷயமாகும். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் ஆறு ஆண்டுகள் இருக்கிறேம். அப்போது சிலர் இரண்டு ஆண்டுகள், சிலர் நான்கு ஆண்டுகள், சிலர் ஆறு ஆண்டுகள் என்று சீட்டு போட்டு எடுப்பது வழக்கம். அப்படி இரண்டு முறை எடுக்கப்பட்டால், நான்கு, நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, ஆறு, ஆறு ஆண்டுகளுக்குப் பணியாற்றுவார்கள். அவர்கள் ஒரு தடவை ஆங்கிலத்தில் கூறினர்கள் : இது என்னுடைய பதின்மூன்றுவது பட்ஜெட் உரை "This is my thirteenth Budget speech" என்று. நான் சொன்னேன் : "No, Mr. Krishnamoorthy, you are marking the Budget speech for the thirteenth time".

என்று. ஏனென்றல், அந்த உரைகளில் எல்லாம் இந்த நாட்டில் எத்தகைய கல்வி இருக்க வேண்டும் என்பதைத் தான் சொல்லுவார்கள். என்னைப் போன்ற கணித ஆசிரியர்களைக் கண்டனம் செய்வார். பாலில் தண்ணீர் கலக்கப்பட்டது என்று எழுதலாமா என்று கேட்பார். இந்தக் கதை எல்லாம் போக வேண்டும், புத்தகங்கள் மூலமாக நல்ல உணர்ச்சியைச் சிறுவர் களுக்கு ஊட்ட வேண்டும், தேசியக் கல்வி அளிக்க வேண்டும் என்று சொல்லுவார்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : குழந்தைகளுக்குக்கூட தனிப் பாலாகக் கொடுக்கக்கூடாது. தண்ணீர் கலந்து தான் கொடுக்க வேண்டும்.

திரு. எம். ராஜா அய்யர் : பதினறு ஆண்டுகள் அந்தப் பேச்சையே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடைசி நான்கு ஆண்டுகளில் அவர் பேசவில்லை என்று கூறப்பட்டது.

அப்போது அவர்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை என்று தான் நாங்கள் கருதினோம். ஏனென்றால், பல குறைகள் தீர்க்கப்பட்டு விட்டன. அவர்கள் பேசியிருந்தாலும் முன்மாதிரி ஆணித்தரமாக குறைகளை எடுத்து வைக்க வேண்டிய நிலை இல்லை. ஆசிரியர்கள் பெற்ற நலன்களை அவர் கண்ணால் பார்த்தார். வாதாடிக் கேட்க வேண்டிய பல விஷயங்கள் தீர்க்கப்பட்டு விட்டன. அவர் பேசாதிருந்தாலும், பேசியாக வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. அவர்கள் துணைத் தலைவராக இருக்கும்போது, பேசலாம் என்று கூறினாலும் கூட, அவர்கள் தனக்குத் தானே ஒரு வரையறை வகுத்துக்கொண்டு, "நான் பேசாமல் இருக்கிறேன், நான் பேச வேண்டிய அவசியமும் இல்லை", என்று எடுத்துக்கூறினார்கள். ஆசிரியர்கள் நலன் தான் அவருடைய உயிர்நாடியாக இருந்தது என்பதை ஆசிரியர் உலகமும் நம்முடைய மன்றமும் நன்றாக அறியும். அப் பெரியாரின் மறைவு ஆசிரியர் சமூகத்திற்கு ஒரு பெரும் இழப்பு என்று கூறிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய நல்ல மொழிகளுடன் நானும் கலந்துகொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, முதல்வர் அவர்கள் முன்மொழிந்த இந்த அனுதாபத் தீர்மானத்தை நானும் வழிமொழிகிற முறையிலே இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நானும் இந்த மன்றத்தில் 1962-ம் ஆண்டிலிருந்து அவர்களுடன் இருந்திருக்கிறேன். அவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது, எனக்கு ஆச்சரியம் அவர்கள் எம்.ஏ. ஆக்ஸ்போர்டில் படித்திருப்பார்களோ என்று எனக்குத் தோன்றும். கடைசியில் பார்க்கும்போது அவர்கள் ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் என்று கேள்விப்பட்டோம். அவர்கள் பேசுகிற நேரத்தில், அந்தப் பேச்சைச் சுருக்கெழுத்தில் எழுதுகிறவர்கள் கஷ்டப்படுவார்கள். அவ்வளவு வேகமாகப் பேசுவார்கள் ; அதே நேரத்தில், ஒவ்வொரு ஆசிரியர் வயது, சர்வீஸ் இவைபற்றிய தகவல்களை எல்லாம் மனப்பாடமாக வைத்துக்கொண்டு பேசுகிற மாதிரி துல்லியமாகச் சொல்லுவதில் அவர் வல்லுநராக இருந்தார். அவர்கள் பேச்சைக் கேட்பது நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். அப்படிப்பட்டவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவருடைய பேச்சை புதிதாக வந்திருப்பவர்கள் கேட்க முடியாமல் போய்விட்டதே என்று வருத்தப்பட்டேன். ஒரு நாளில் அரை மணி நேரமாவது பேசக்கூடியவர் அதன்பிறகு வாய்

அடைத்த மாதிரி பேசாமல் உட்கார்ந்து விட்டார். ஆசிரியர்களுக் கெல்லாம் பாதுகாப்பாக இருந்து அவர்களுடைய நலனைக் கட்டிக் காத்துக் கொண்டிருந்தார். அவர் மறைவு நமக்கு மிகுந்த வருத் தத்தைக் கொடுக்கிறது. அவருடைய குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர் களுடைய ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர் களும் எதிர்க் கட்சித் தலைவரும் பிற கட்சித் தலைவர்களும் தெரி வித்த துயர உணர்ச்சிகளில் நான் முழுமையாகப் பங்கு கொள் கிறேன்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி 1952-லிருந்து 1972 வரை சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தார். ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக அவர் கல்வித் துறைச் சங்கங்கள் பலவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தார். சட்டமன்ற மேலவையில், ஆசிரியர் கள் கோரிக்கைகளுக்குப் பேராதரவு தந்தார். அவர்கள் நலனில் ஆர்வங் கொண்டு அவர்களுடைய பணி நிலைமைகள் மேம்படு வதற்குப் பெரிதும் பாடுபட்டார். 1969 மார்ச்சில் அவர் தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவர் அப்பதவியை 1972 ஏப்ரல் வரை தொடர்ந்து வகித்து வந்தார்.

காலஞ் சென்றவருக்கு நமது அஞ்சலியைத் தெரிவிக்கும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எழுந்து நின்று இரு நிமிடங்கள் மௌனம் காத்து, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றார்கள்).

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.